# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

### <u>மித்ர சக்தியின் 09ஆம் பதிப்பு நிறைவு</u>

இந்திய இலங்கை வருடாந்த இருதரப்பு பயிற்சியான மித்ர சக்தியின் 9ஆவது பதிப்பு 2023 நவம்பர் 16-19 வரையான திகதிகளில் இந்தியாவின் புனேயில் உள்ள வெளிநாட்டு பயிற்சி பிரிவில் நடைபெற்றது.

2. இப்பயிற்சிகளில் கலந்துகொண்டிருந்த இந்திய படையினரில் இந்திய விமானப்படையைச் சேர்ந்த 15 விமானப்படை வீரர்கள் மற்றும் உயரதிகாரிகளும் மராதா இலகு காலாற்படையை சேர்ந்த 120 வீர்ர்களும் உள்ளடங்கியிருந்தனர். இதேவேளை 53ஆம் காலாட்படை பிரிவிலிருந்து 117 வீரர்களும் விமானப்படையிலிருந்து 06 அதிகாரிகளும் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி இந்த பயிற்சிகளில் இணைந்திருந்தனர். இப்பயிற்சிகளில் பங்கேற்கும் இலங்கை வீரர்கள் புனேயை நோக்கி பயணிப்பதற்காக இந்திய அரசாங்கத்தால் IAF IL-76 விமானம் சேவையில் அமர்த்தப்பட்டிருந்தது.

3. இப்பயிற்சிகளில் பங்கேற்கும் இருதரப்பு இராணுவத்தினருக்கும் மேலதிகமாக, குறித்த வருடாந்த பயிற்சி நடவடிக்கையான மித்ர சக்தி 09 ஆம் பதிப்பிலேயே முதல்தடவையாக இரு நாட்டையும் சேர்ந்த விமானப்படையினர் கலந்துகொள்வதன் மூலம் இப்பயிற்சியானது இரு சேவைப்பிரிவினரும் பங்கேற்கும் முதலாவது பதிப்பாக மாற்றமடைந்துள்ளது. மித்ர சக்தி 8ஆவது பதிப்பின் வெற்றியின் அடிப்படையில், இப்பயிற்சியானது ஒருங்கிணைந்த ஆயுதப் பயிற்சிகளிலிருந்து இரட்டை சேவை நிலைக்கு மேம்படுத்தப்பட்டது. பயங்கரவாதம் உள்ளிட்ட பொதுவான அச்சுறுத்தல்களை வினைத்திறனுடன்

எதிர்த்துப் போராடுவதற்காக இரு நாடுகளுக்கும் இடையேயான பாதுகாப்பு ஒத்துழைப்பு மேம்பட்டுவருவதனை இப்பயிற்சி நிரூபிக்கின்றது.

4. இதற்கு மேலதிகமாக, மித்ர சக்தியின் 09ஆவது பதிப்பில் ஹெலிகொப்டர்கள், ட்ரோன்கள் மற்றும் ஆளில்லா எதிர்ப்பு வான்கலங்கள் போன்றவை பயன்படுத்தப்பட்டிருந்தமையும் மற்றொரு சிறப்பம்சமாகும். இராணுவ தற்காப்புக் கலைகள் (AMAR), மோதல்களுக்கான துப்பாக்கி பாவனை மற்றும் யோகா ஆகியவையும் இந்த பயிற்சிகளில் இணைக்கப்பட்டுள்ளன. மேலும், இந்த பதிப்பில் இருபாலினத்தினரது பிரதிநிதித்துவத்துக்கும் முக்கியத்துவமளிக்கப்பட்டிருந்தது. இரு தரப்பிலிருந்தும் பெண் அதிகாரிகள் மற்றும் வீராங்கனைகள் இதில் கலந்துகொண்டிருந்தனர்.

5. இந்தியாவிலும் இலங்கையிலும் நடைபெற்றுவரும் குறித்த மித்ரசக்தி இராணுவ பயிற்சியானது பிராந்தியத்தில் இடம்பெறும் பாரிய வருடாந்த இருதரப்பு பயிற்சிகளில் ஒன்றாகும். சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்புக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களை முறியடிப்பதற்காக இராணுவத்தை பயன்படுத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பாதுகாப்பு சபைக்கு அதிகாரமளிக்கும் ஐக்கிய நாடுகள் சாசனத்தின் ஏழாம் சரத்தின் கீழ் துணை மரபு வழி நடவடிகைகளை கூட்டாக ஒத்திகை மேற்கொள்ளும் வகையில் இப்பயிற்சி வடிவமைக்கப்பட்டுள்ளது. நாடுகடந்த பயங்கரவாத நடவடிக்கைகளை முறியடித்தல், கூட்டு தந்திரோபய செயற்பாடுகளை மேற்கொள்ளல் மற்றும் போர்த் திறனை மேம்படுத்தல் ஆகியவற்றில் நிபுணத்துவத்தை மேம்படுத்துவதற்கு இந்த பயிற்சிகள் ஆதரவாக அமைகின்றன. அத்துடன் இந்தியாவின் ‘அயலுறவுக்கு முதலிடம் கொள்கை மற்றும் ‘பிராந்தியத்தில் அனைவருக்கும் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி (SAGAR)’ என்ற சாகர் கோட்பாட்டுக்கு அமைய இரு ஆயுதப் படைகளுக்கும் இடையிலான இயங்குதிறன் மற்றும் பரஸ்பர புரிந்துணர்வையும் இப்பயிற்சி மேம்படுத்துகிறது.

***

கொழும்பு

30 நவம்பர் 2023